## சிலோன் ஷிபிங் கோபரேஷன் லிமிட்டட் - 2016/2017

---

சிலோன் ஷிபிங் கோபரேஷன் லிமிட்டட்டின் (''கம்பனி'') 2017 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புகளை உள்ளடக்கிய 2017 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுகள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின்கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) உறுப்புரை பிரகாரம் என்னால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென கருதப்படும் மீளாய்வாண்டிற்கான கம்பனியின் செயற்பாடுகள் தொடர்பான எனது அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிகூற்றுகளுக்கான பணிப்பாளர் சபையின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுகளை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுகளிலிருந்து விடுப்பட்ட நிதிக்கூற்றுகளை தயாரிப்பதற்கு அவசியமானதென நிர்ணயிக்கின்ற உள்ளக கட்டுப்பாடுகள் என்பவற்றுக்கு பணிப்பாளர் சபை (''சபை'') பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுகளின்மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுகள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக் கூற்றுகளிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுகளின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தனை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுகளைத் தயாரித்தல் மற்றும் நியாயாமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளக கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. சபையால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.4.1 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, 2017 மார்ச் 31 இல் உள்ளவாறான சிலோன் சிபிங் கோப்பரேஷன் லிமிட்டட்டின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார்

செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சல்களினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.4.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) கம்பனி, சரக்கு கட்டணங்கள் ரூபா 91,338,313 தொகையொன்றை நிலக்கரி போக்குவரத்து கட்டுப்பாட்டுக் கணக்கில் பதிவதற்குப் பதிலாக அகல்விரிவான வருமானக்கூற்றில் பிழையாக வரவு வைக்கப்பட்டிருந்தது. அதன் விளைவொன்றாக, மீளாய்வாண்டிற்கான நட்டம் மற்றும் வியாபார செலுத்த வேண்டியவைகள் அதே தொகையினால் மிகைத்துக் குறிப்பிடப்பட்டிருந்தது. மேலும், 2017 மார்ச் 31 இல் உள்ளவாறான நிலக்கரி போக்குவரத்து கட்டுப்பாட்டுக் கணக்கில் ரூபா 144,405,551 இணக்கஞ்செய்யப்படாத மீதியொன்று காணப்பட்டமை வெளிப்படுத்தப்பட்டது.

(ஆ) திறைசேரி உண்டியல்கள் மீதான வட்டி வருமானம் உத்தேச வரியினைக் கழித்த பின்னர் கணக்கிடப்பட்டிருந்தது. அதன் விளைவொன்றாக மீளாய்வாண்டிற்கான வட்டி வருமானம் ரூபா 2,892,483 இனால் குறைத்துக் குறிப்பிடப்பட்டிருந்தது.

(இ) கம்பனி ரூபா 2,892,548 உத்தேச வரியினை கழித்த பின்னர் ரூபா 7,281,062 நடைமுறை வரிப் பொறுப்புக்கான ஏற்பாட்டினைக் கருத்திற் கொண்டிருந்தது. அதேவேளை, வரிக் செலவு வைத்தல்களினை எதிரீடு செய்வதற்கு முன்னர் செலுத்த வேண்டிய மொத்த வரிக்கான ஏற்பாடொன்றை மேற்கொள்ள வேண்டும். அதன் விளைவொன்றாக, நடைமுறை வரிச் செலவினங்கள் ரூபா 2,892,548 இனால் குறைத்துக் குறிப்பிடப்பட்டிருந்தது.

(ஈ) நிதிக்கூற்றுக்களினை சமர்ப்பித்தல் தொடர்பான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் (எல்கேஏஎஸ் 01) 32 ஆம் பந்தியின் பிரகாரம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் அல்லது வருமானம் மற்றும் செலவினங்களினை எதிரீடு செய்தல், ஏனைய எஸ்எல்எவ்ஆர்எஸ் இனால் வேண்டப்பட்டாலேயொழிய அனுமதிக்கப்படவில்லை. எவ்வாறாயினும், அதற்கு முரணாக, கம்பனி கடன் மீதிகளுக்கு எதிராக வரவு மீதிகளினை எதிரீடு செய்திருந்தது. அதன்விளைவொன்றாக, மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியான மொத்த வியாபார மற்றும் ஏனைய வருமதிகள் மற்றும் வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகள் ரூபா 176,067,313 இனால் குறைத்துக் குறிப்பிடப்பட்டிருந்தது.

(உ) சரக்கு தீர்வை மற்றும் நாணயமாற்று கணக்குகளுடன் தொடர்புடைய நாளேட்டுப் பதிவுகளினை பதிவு செய்திருக்காமை காரணமாக, ரூபா 3,274,697 இனால் நட்டம் குறைத்துக் குறிப்பிடப்பட்டிருந்ததுடன் கடன்பட்டோர் மிகைத்துக் குறிப்பிடப்பட்டிருந்தது.

(ஊ) கம்பனி சரியான நடைமுறை மற்றும் முன்னைய ஆண்டு வரி நட்டங்கள் மற்றும் கூட்டு நட்டக்கழிவின் விடுபாடுகளை கருத்திற்கொண்டிராது பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்களினை கணிப்பிடப்பட்டிருந்தது. அதன் விளைவொன்றாக, 2017 மார்ச் 31 இல் உள்ளபடியான பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் மற்றும் மீளாய்வாண்டிற்கான ஏற்பாடு ரூபா 51,065,156 இனால் குறைத்துக் குறிப்பிடப்பட்டிருந்தது.

(எ) முன்னைய ஆண்டில் மசகு எண்ணெய் போக்குவரத்து செயற்பாடுகளிலிருந்து வழங்கப்பட்ட வருமானம், மீளாய்வாண்டிற்கான வருமானமாக இனங்காணப்பட்டிருந்தது. அதன் விளைவொன்றாக, மீளாய்வாண்டின் வருமானம் ரூபா 1,885,152 இனால் மிகைத்துக் குறிப்பிடப்பட்டிருந்தது.

### 1.5 ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 163(2) ஆம் பிரிவின் மூலம் வேண்டப்பட்டவாறு, நான் பின்வருமாறு குறிப்பிடுகின்றேன்.

(அ) அபிப்பிராயத்திற்கான அடிப்படையும் கணக்காய்வின் நோக்கெல்லையும் வரையறைகளும் மேற்குறிப்பிடப்பட்டவாறு உள்ளன.

(ஆ) நான் அபிப்பிராயப்படுவதாவது:

- கணக்காய்விற்கு அவசியமான சகல தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என்பதுடன் இதுவரையான எனது பரீட்சிப்பின் மூலம் தென்படுகின்றவாறு முறையான கணக்கீட்டுப் பதிவேடுகள் கம்பனியால் வைத்திருக்கப்படுகின்றன என்பதும்,
- 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 151 ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுடன் கம்பனியினது நிதிக்கூற்றுக்கள் இணங்குகின்றன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

நிதிக்கூற்றுக்களினை சமர்ப்பித்தல் தொடர்பான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் (எல்கேஏஎஸ் 01) 54(கா) பிரிவின் பிரகாரம், நிதிநிலைமைக் கூற்றிலுள்ள வரிசை வகையொன்றாக எல்ஏகேஏஎஸ் 12 இல் (வருமான வரி) வரையறுக்கப்பட்டவாறு, சொத்துக்கள் மற்றும் நடைமுறை வரிக்கான பொறுப்புக்கள் வெளிப்படுத்தப்பட வேண்டுமென வேண்டப்படுகின்றது. எவ்வாறாயினும், கம்பனி ஏனைய செலுத்த வேண்டிய வரியுடன் செலுத்த வேண்டிய வருமான வரியினை ஒன்றிணைத்திருந்ததுடன் நிதிநிலைமைக் கூற்றில் நியதிச்சட்ட செலுத்தவேண்டியவைகளாக வெளிப்படுத்தியிருந்தது.

#### 2.2.2 கணக்காய்விற்கு கிடைக்கப்பெறாத சான்றுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கம்பனிக்கு உரித்தல்லாத காணியொன்றில் ஐந்து வீடுகளினை நிர்மாணிப்பதற்கு முன்னைய ஆண்டுகளில் செலவிடப்பட்டிருந்த ரூபா 4,058,232 தொகையொன்று, ஆதனம், பொறி மற்றும் உபகரண வரிசை வகையின் கீழ் காணி மற்றும் வீடமைப்பு செயற்திட்டமாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. ஆதனத்தின் உரிமைத்துவத்தினை நிரூபிக்க உறுதியொன்றின் உறுதிப்படுத்தலினை ஏற்றுக்கொள்ள, போதுமானதும் பொருத்தமானதுமான சான்று வழங்கப்பட்டிருக்கவில்லை. மேலும், கம்பனி இரண்டு வீடுகளினை மாத்திரம் பயன்படுத்துகின்றதுடன் ஏனைய 3 வீடுகள் மற்றொரு தரப்பினரால் பயன்படுத்தப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) நிதி நிலைமைக்கூற்றில் காட்டப்பட்ட பின்வரும் கணக்கு மீதிகளுடன் தொடர்புடைய ஆவணங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| விபரங்கள் | தொகை | கிடைக்கப்பெறாத சான்று |
| --- | --- | --- |
| | ரூபா. | |
| கடன்பட்டோர் (16 மீதிகள்) | 938,145,101 | மீதி உறுதிப்படுத்தல் |
| வெளிநாட்டு வியாபார செலுத்த வேண்டியவைகள் (09 மீதிகள்) | 23,742,998 | மீதி உறுதிப்படுத்தல் |

## 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 2.3.1 பெறவேண்டியவைகள்

2017 மார்ச் 31 இல் உள்ளபடியான வியாபார கடன்பட்டோர்களின் மொத்த நிலுவையாகவுள்ள மீதிகள் ரூபா 1,360,274,152 தொகையாகக் காணப்பட்டதுடன் ரூபா 408,868,624 இற்குச் சமமானதாகக் காணப்பட்ட 30 சதவீத நட்டக்கழிவு ஏற்பாடு மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு மேற்கொள்ளப்பட்டிருந்தது. கடன்பட்டோரின் வயதுப் பகுப்பாய்வின் பிரகாரம் சில மீதிகள் 37 வருடங்களினை விடவும் அதிகமாக செலுத்தப்படாது தொடர்ந்தும் காணப்படுகின்றதுடன் கம்பனி அந்த மீதிகளினை அறவிடுவதற்கு முறையான நடவடிக்கைகளினை எடுத்திருக்கவில்லை.

தீர்ப்பனவு செய்யப்படாத மீதிகள் தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ரூபா 938,793,849 தொகையான 17 கடன்பட்டோர் மாதிரிகள் உறுதிப்படுத்தலுக்காக தெரிவு செய்யப்பட்டு அழைக்கப்பட்டிருந்தனர். எவ்வாறாயினும், ரூபா 648,748 ஆக கணக்குகளில் காட்டப்பட்டிருந்த ஒரு கடன்பட்டோர் மாத்திரம் அவரின் மீதி பூச்சியமாக காணப்படுகின்றதென உறுதிப்படுத்தியிருந்தார். ஆகையினால், இந்த பெற வேண்டியவைகளின் உள்ளதன்மை மற்றும் நம்பகத்தன்மையிலான கணக்காய்வில் உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

(ii) 04 தனியார் கம்பனியிடமிருந்து நிலுவையாகக் காணப்பட்ட ரூபா 128.86 மில்லியன் தொகையொன்று மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு 3 வருடங்கள் காலப்பகுதியொன்றுக்கு அதிகமாக மாற்றமின்றி தொடர்ந்தும் காணப்பட்டது. அதில் ரூபா 87.4 மிலலியன் நடுவர் தீர்ப்பிற்கு அளிக்கப்பட்டுள்ளது. ஏனைய 03 கம்பனிகளிடம் நிலுவையாகக் காணப்படும் ரூபா 41.4 மில்லியனை அறவிடுவதற்கு திருப்திகரமாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்காததுடன் நட்டக்கழிவிற்காக 100 சதவீத ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(iii) 06 வெளிநாட்டு கப்பல் முகவர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 20.59 மில்லியன் தொகையொன்று, சரக்கு தீர்ப்பனவு கணக்கின் கீழ் 03 வருடங்கள் காலப்பகுதியொன்றுக்கும் அதிகமாக மாற்றமின்றி தொடர்ந்தும் காணப்பட்டன. எவ்வாறாயினும், கம்பனி அந்த பெறவேண்டியவைகளினை அறவிடுவதற்கு வினைத்திறனான நடவடிக்கைகளினை எடுத்திருக்காததுடன் நட்டக்கழிவிற்காக 100 சதவீத ஏற்பாடுகளினை மேற்கொண்டிருந்தது.

(iv) கம்பனியால் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு மிகையாக அனுப்பப்பட்டிருந்த ரூபா 21.54 மில்லியன் தொகையான பொருட்கள் மற்றும் சேவைகள் வரிகள் மற்றும் தேசிய பாதுகாப்பு வரிகள், நியதிச்சட்ட பெறவேண்டியவைகளாக 17 வருடங்கள் காலப்பகுதிக்கும் அதிகமாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(v) ரூபா 6,722,762 தொகையான பாதுகாப்பு வைப்புக்கள் மீளாய்வாண்டின் இறுதியில் அறவிடப்பட்டிராது பல வருடங்கள் காலப்பகுதியொன்றுக்கும் அதிகமாக

தொடர்ந்தும் காணப்படுகின்றது. எவ்வாறாயினும், கம்பனி உரிய நேரத்தில் அந்த வைப்புக்களினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(vi) ரூபா 28,052,356 தொகையான பெறவேண்டிய உத்தரவாத திருத்தங்கள் மற்றும் முற்செலுத்துகைகளுடன் தொடர்புடைய போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகள், மீதிகளின் துல்லியத்தன்மை மற்றும் உள்ளதன்மையினை உறுதிப்படுத்துவதற்கு வழங்கப்பட்டிருக்கவில்லை.

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) பொது முயற்சிகள் சுற்றறிக்கை | |
| (i) 2015 மே 25 இன் பிஈடீ 1/2015 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தி | சுற்றறிக்கையின் 03 ஆம் பந்திக்கு முரணாக, ஒவ்வொரு வகையான உத்தியோகத்தர்களுக்கான நிலையான மாதாந்த எரிபொருள் எல்லையினை மிகைத்து மீளாய்வாண்டின் போது பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் கீழ் 12 உத்தியோகத்தர்களுக்காக ரூபா 648,414 தொகையான எரிபொருள் படிகள் வழங்கப்பட்டிருந்தது. தலைவரின் பதிலின் பிரகாரம், கம்பனி குறித்த விடயத்தினை திருத்தியிருந்தது. எவ்வாறாயினும், மிகையாகச் செலுத்தப்பட்ட தொகைகள் அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 2003 யூன் 02 இன் பிஈடீ 12 ஆம் இலக்க சுற்றறிக்கை | நிதியாண்டு ஆரம்பிப்பதற்கு முன்னர் மூன்று மாதங்களுக்கு முன்பு வரைபு பாதீடு அங்கீகாரத்திற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன், அங்கீகரிக்கப்பட்ட பாதீட்டின் பிரதிகள் உறுதிப்படுத்தும் ஆண்டின் ஆரம்பத்திற்கு முன்னர் 15 நாட்களினை விடப் பிந்தாது வரிசை அமைச்சு, பொது திறைசேரியின் பொது முயற்சிகள் திணைக்களம் மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பப்படல் வேண்டும். எவ்வாறாயினும், 2015/16 மற்றும் 2016/17 ஆம் நிதியாண்டுகளுக்குரிய பாதீட்டிற்கான சபை அங்கீகாரம் முறையே 2015 மே 19 மற்றும் 2016 ஏப்ரல் 07 இல் அளிக்கப்பட்டிருந்தது. |
| (iii) 2003 யூன் 02 இன் பிஈடீ/12 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 9.3.1(viii) ஆம் பிரிவு மற்றும் 2008 நவம்பர் 25 இன் 52 ஆம் | ஒவ்வொரு முயற்சிகளும் குறிப்பாக, முகாமைத்துவ மட்ட பதவிகளில் இடம்பெறுகின்ற வெற்றிடங்கள் போன்ற நிகழ்வில் கையேற்பதற்கு நியமிக்கப்பட்ட |

| | | |
|---|---|---|
| | இலக்க சுற்றறிக்கை | ஒருவருடன் தொடர்ச்சியான திட்டமொன்றைக் (succession plan) கொண்டிருக்க வேண்டும். எவ்வாறாயினும், கம்பனி திட்டமொன்றை வடிவமைத்து அமுல்படுத்துவதற்கு ஏற்பாடுகளினை மேற்கொண்டிருக்காமையினால் பொருத்தமானதொரு பதிலாளை நியமிக்க முடியாதிருந்தது. அதன் விளைவொன்றாக, கம்பனி சுற்றறிக்கையின் தேவைப்பாடுகளுக்கு முரணாக ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களினை நியமித்திருந்தது. |
| (iv) | 2015 யூன் 17 இன் பிஈடீ 3/2015 ஆம் இலக்க சுற்றறிக்கை | கம்பனியின் தலைவர் மற்றும் நிறைவேற்றுப் பணிப்பாளர்க்கு உரித்தான மாதாந்தப் படிகள் முறையே ரூபா 80,000 மற்றும் ரூபா 65,000 ஆகக் காணப்பட்டன. எவ்வாறாயினும், அதற்கு முரணாக, கம்பனி நிதி அமைச்சின் இணக்கப்பாட்டுடன் வரிசை அமைச்சு செயலாளரிடமிருந்து எவ்வித பரிந்துரைகளிளைனயும் பெற்றுக் கொள்ளாது, 2007 ஆம் ஆண்டில் பணிப்பாளர் சபையினால் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் தலைவர் மற்றும் நிறைவேற்றுப் பணிப்பாளர்க்கு முறையே ரூபா 85,000 மற்றும் ரூபா 75,000 மாதாந்தப் படிகளினை செலுத்தியிருந்தது. தலைவரின் பதிலின் பிரகாரம், கம்பனி இந்த விடயத்தினை 2019 இல் கண்டறிந்திருந்தது. எவ்வாறாயினும், மிகையாகச் செலுத்தப்பட்ட தொகைகள் அறவிடப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2017 மார்ச் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான கம்பனியின் நட்டத்தினை முன்னைய ஆண்டிற்கான ரூபா 74,317,129 மிகைகளுடன் ஒப்பிடுகையில் ரூபா 237,010,652 தொகையாகக் காணப்பட்டமையினால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் நிதி விளைவில் ரூபா 311,327,781 அல்லது 418.9 சதவீத பற்றாக்குறையொன்றினை சுட்டிக்காட்டுகின்றது. ரூபா 1,075,542,832 அல்லது 1,373 சதவீதத்தினால் நிதிச் செலவினம் அதிகரித்தமை இந்தப் பற்றாக்குறைக்கு பாதகமானதாக தாக்கமளித்திருந்தது.

மீளாய்வாண்டு மற்றும் கடந்த 04 ஆண்டுகளுக்கான நிதிசார் விளைவுகளினை பகுப்பாய்வு செய்கையில், 2013/2014 காலப்பகுதிக்காக உயர்வாகப் பெறப்பட்டிருந்த ரூபா 250,477,672 பற்றாக்குறையிலிருந்து, மீளாய்வாண்டிற்கான ரூபா 237,010,652 தொகையான நட்டமொன்றிற்கு நிதிவிளைவு தொடர்ந்தும் காணப்பட்டது. பொருளாதாரத்திற்கான பங்களிப்பினை கருத்திற்கொள்கையில், 2014/2015 ஆம் ஆண்டில் ரூபா 485,942,361 இலிருந்து மீளாய்வாண்டின் போது ரூபா 396,573,669 இற்கு அது குறைவடைந்திருந்தது.

**3.2 பகுப்பாய்வு நிதிசார் மீளாய்வு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கம்பனியின் மொத்த வருமானத்தை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 1,924 மில்லியன் அல்லது 312 சதவீதத்தினால் மீளாய்வாண்டின் போது அதிகரித்திருந்ததுடன் நேரடி செலவினங்கள் ரூபா 1,339 மில்லியன் அல்லது 513 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. வர்த்தகரீதியான தொழிற்பாடுகளுக்காக கொள்வனவு செய்யப்பட்ட இரண்டு புதிய கப்பல்களினை கம்பனி ஈடுபடுத்தியிருந்தமை, மீளாய்வாண்டின் போது குறிப்பிடத்தக்க தொகையில் வருமானம் மற்றும் செலவினம் அதிகரிப்பதற்கு காரணமாகக் காணப்பட்டது.

(ஆ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் போது கப்பல் கடன் மீதான வட்டிச் செலவினம் ரூபா 611 மில்லியன் அல்லது 1500 சதவீதத்தினால் அதிகரித்திருந்ததுடன் கப்பல் கடன் மீதான நாணயமாற்று நட்டம் ரூபா 464 மில்லியன் அல்லது 1,236 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. அதற்கமைய, மீளாய்வாண்டிற்கான தேறிய நட்டத்திற்கு நேரடியான காரணமாகக் காணப்பட்ட மொத்த நிதி செலவினம் ரூபா 1,075.5 இனால் அதிகரித்திருந்தது.

கம்பனியின் வருமானம் மற்றும் மொத்த இலாபம் முறையே 312 சதவீதம் மற்றும் 164 சதவீதத்தினால் அதிகரித்திருந்த போதிலும், வரிக்குப் பின்னரான தேறிய இலாபம் 419 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது. பற்றாக்குறைக்கான காரணங்கள், மேலே குறிப்பிடப்பட்டவாறு கப்பல் கடன் மீதான வட்டிச் செலவினம் அதிகரித்தமை மற்றும் நாணயமாற்று நட்டம் அதிகரித்தமையாகக் காணப்பட்டது.

**3.3 விகிதங்களின் பகுப்பாய்வு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் மொத்த இலாப எல்லையினை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 58 சதவீதத்திலிருந்து 37 சதவீதத்திற்கு குறைவடைந்திருந்தது. இது வருமான அதிகரிப்பினை விட கணிசமாக உயர்வாகக் காணப்பட்ட செயற்பாட்டு செலவினங்கள் பிரதானமாக அதிகரித்தமை காரணமாகக் காணப்பட்டது. மேலும், 2017 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான தேறிய இலாப எல்லை முன்னைய ஆண்டில் 12 சதவீதத்திலிருந்து எதிர்மறை 11 சதவீதத்திற்கு கைவிடப்பட்டிருந்தது. இந்த குறைவுக்கான பிரதான காரணம் ரூபா 1,075.5 மில்லியன் வரை நிதிச் செலவினம் அதிகரித்தமையாகக் காணப்பட்டது.

(ஆ) கம்பனி மீளாய்வாண்டின் போது 3 சதவீத தாழ்ந்த விகிதமான ஈடுபடுத்திய மூலதனம் மீதான திரும்பலினை பதிவு செய்திருந்தது.

(இ) கம்பனியின் நடைமுறை விகிதம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் போது 1.07 தடவைகளிலிருந்து 0.91 தடவைகள் வரை குறைவடைந்திருந்ததுடன் வரைவு விகிதம் 2015/16 தொடக்கம் 2016/17 வரை 1.02 தடவைகளிலிருந்து 0.83 தடவைகள் வரை குறைவடைந்திருந்தது.

(ஈ) மீளாய்வாண்டிற்கான கம்பனியின் இணைவு விகிதம், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 57 சதவீத அதிகரிப்பொன்றாகக் காணப்பட்ட 991 சதவீதமாகக் காணப்பட்டது.

**4. செயற்பாட்டு மீளாய்வு**

**4.1 முகாமைத்துவ வினைத்திறனின்மைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கம்பனி ரூபா 5,500,000 இற்கு புதிய நிதி பொதியொன்றை அபிவிருத்தி செய்வதற்கு 2006 இல் அரச பெறுகை வழிகாட்டல்களில் விபரிக்கப்பட்ட நடைமுறையினைப் பின்பற்றியிராது ஒப்பந்தமொன்றை அளித்திருந்தது. 2016 செப்தெம்பரில் ரூபா 1,375,000 ஆரம்ப செலுத்துகையொன்றை மேற்கொண்ட பின்னர், முறைமையில் கண்டறியப்பட்ட சில பிழைகளினை சரிப்படுத்துவதற்கு சேவை வழங்குனரிடம் இயலாமை காணப்பட்டமை காரணமாக ஒப்பந்தத்தை முடிவுறுத்துவதற்கு முகாமைத்துவம் தீர்மானித்திருந்தது. எவ்வாறாயினும், ஏதேனும் மிகைச் செலுத்துகையினை அறவிடுவதற்கு அல்லது வேலையினை பூர்த்தி செய்வதற்கு கம்பனி நடவடிக்கையினை எடுத்திருக்கவில்லை.

(ஆ) கம்பனி இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துடன் முறையானதொரு உடன்படிக்கையொன்றை ஏற்படுத்தியிருக்காது மசகு எண்ணெய் போக்குவரத்து செயற்பாடுகளினை நிறைவேற்றியிருந்தது. ஆகையினால், போதுமான, பொருத்தமான ஆவணங்களின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டிராத ரூபா 175,671,681 தொகையான மசகு எண்ணெய் போக்குவரத்துடன் தொடர்புடைய பெறவேண்டிய மீதிகள் நான்கு வருடங்கள் காலப்பகுதியொன்றுக்கும் அதிகமாக அறவிடப்பட்டிராது தொடர்ந்தும் காணப்படுகின்றது.

**4.2 செயலாற்றல்**

2016/17 ஆம் நிதியாண்டிலிருந்து ஆரம்பித்த ஐந்து வருடங்களுக்கான கூட்டிணைந்த திட்டத்தின் பிரகாரம், 2016/2017 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தில் பின்வரும் புதிய 05 செயற்பாடுகளினை அமுல்படுத்துவதற்கு கம்பனி திட்டமிட்டிருந்தது. எவ்வாறாயினும், கம்பனி திட்டமிட்டவாறு இலக்குகளினை அடைந்து கொள்வதற்கு தவறியிருந்ததுடன் அவை ஆரம்பக் கட்டத்தில் தொடர்ந்தும் காணப்பட்டன.

(i) ஆதரவற்ற பொதிகளின் தீர்ப்பனவு மற்றும் சுங்க பிணையளிக்கப்பட்ட பண்டகசாலையின் நிர்மாணம்

(ii) கொழும்பு / சிட்டாங்கெங் இற்கு இடையிலான கொள்கலன்களுக்கான உணவூட்டல் சேவையினை ஆரம்பித்தல்.

(iii) 05 எண்ணிக்கையான சுய செலுத்துகை விசைப் படகுகளின் (SPBs) கொள்வனவு

(iv) கொழும்பு மற்றும் டுடிகோரின் இற்கு இடையிலான பயணிகள் படகு சேவையினை மீள் தொடங்குதல்.

(v) இலங்கை கொடி பதிவு செய்தலினை (கொடியின் சௌகரியம்) ஊக்குவித்தல்.

**5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளின் குறைப்பாடுகள் கம்பனியின் தலைவரின் கவனத்திற்கு காலத்திற்குகாலம் கொண்டு வரப்பட்டன. பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் மீது விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| **முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள்** | | **அவதானிப்புகள்** | |
|---|---|---|---|
| (i) | கணக்கீடு | (i) | நிதித் தகவல்களின் துல்லியதன்மை மற்றும் பூரணத்தன்மை |
| | | (ii) | இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை |
| | | (iii) | நாளேட்டுப் பதிவுகளினை அங்கீகரிப்பதில் மற்றும் பேரேடுகளில் பதிவிடுவதில் பலவீனங்கள் |
| (ii) | தொழில்நுட்ப தகவல் முறைமை | (i) | தகவல் முறையில் பராமரிப்பு செயற்பாடுகள் மற்றும் கட்டுப்பாடுகளினை மேற்கொள்ளாமை |
| | | (ii) | கம்பனியின் தேவைப்பாடுகளுடன் இணங்காமை |
| (iii) | கடன்கொடுத்தோர் மற்றும் கடன்பட்டோர் | | அறவிடுகைகள் மற்றும் செலுத்துகைகளில் தாமதங்கள். |